செய்தி வெளியீடு எண்: 59 நாள்: 30.08.2019.

**தேனி மாவட்டம்**
**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்**
**118 விவசாயிகளுக்கு ரூ.16.18 இலட்சம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.. அவர்கள் வழங்கினார்**
******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (30.08.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.85,680/- மதிப்பிலான ரொட்டேட்டர் கருவியினையும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.15,32,274/- மதிப்பீட்டிலான மானியத்துடன் கூடிய டிராக்டர்களையும், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் 115 விவசாயிகளுக்கு ரூபே கடன் அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

தேனி மாவட்டத்தில் இயல்பான ஆண்டு சராசரி மழை அளவு 829.80 மி.மீ ஆகும். இது நாள் வரை 504.37 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் இதுவரை 212.39 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு, சான்று அட்டை பொருத்திய நெல் விதைகள் 89.8 மெ.டன்னும் (கோ51-50.16 மெ.டன், NLR-34449-23.09 மெ.டன், TKM-13 - 16.55 மெ.டன்), சிறுதானியமான கம்பு விதை 1.46 மெ.டன்னும், உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப் பயிர் போன்ற பயறு வகை விதைகள் 22.65 மெ.டன்னும், எண்ணெய் வித்துப் பயிர்களில் நிலக்கடலை விதைகள;(VRI-8,Dharani,K-9,K-6,GJG-9) 22.45 மெ.டன்னும் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் காரீப் பருவ சாகுபடிக்குத் தேவையான உரங்களான யூரியா 2917 மெ.டன்னும், DAP 1271 மெ.டன்னும், பொட்டாஷ் 1278 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 6081 மெ.டன்னும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரியின் விவசாயிகள் ஊக்கத் தொகை திட்டத்தின் (PM KISAN) கீழ் முதல் இரண்டு தவணைத் தொகையாக தேனி மாவட்டத்தில் மட்டும் 36,909 விவசாயிகளுக்கு ரூ.12.26 கோடியும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி நுண்ணீர்ப்பாசன திட்டத்தின் (PMKSY) கீழ் தேனி மாவட்டத்தில் சொட்டு நீர் பாசனத்திற்கு 5371 எக்டர் பரப்பில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. அனைத்து விவசாயிளும் தங்கள் வட்டாரத்திலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்ததை அணுகி சிறு / குறு விவசாயிகள் 100 சத மானியத்திலும், சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதலை விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு கட்டுப்படுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டங்கள் வட்டாரம் தோறும் நடத்தப்பட்டு வருகிறது. கடந்தாண்டு தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டாரத்தில், 19 விவசாயிகளுக்கு மக்காச்சோள படைப்புழு தாக்குதல் நிவாரண நிதியாக ரூ.3,87,990/- பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (SDRF) வழங்கப்பட்டுள்ளது.

கஜா புயல் நிவாரண நிதி திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் கஜா புயல் பாதிப்பு நிவாரண நிதியாக இதர பயிர்களில் 395 விவசாயிகளுக்கு ரூ.28,25,028/- வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் (PMFBY) நடப்பு பருவத்தில் காரீப் 2019-இலக்கான 2457 ஏக்கரில் தற்போது வரை 155 விவசாயிகள் சுமார் 240.63 ஏக்கர் பயிர் காப்பீடு பதிவு செய்துள்ளார்கள். பருத்தி பயிருக்கு 6 அறிவிக்கப்பட்ட கிராமங்களிலும் பிரிமியம் செலுத்த இறுதி நாள் 30.09.2019-க்குள் விவசாயிகள் பயிர் காப்பீடு பிரிமியம் செலுத்தி பயன் அடையலாம்.

தேனி மாவட்டத்தில் இதுவரை 3452 விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விவசாயி ஒருவர் எந்தவொரு ஈட்டுறுதியும் இல்லாமல் ரூ.1.60 இலட்சம் வரையும், நில ஈட்டுறுதி அடிப்படையில் ரூ.3 லட்சம் வரையும் கடன் பெற்றுக் கொள்ளலாம். அட்டையின் கால அளவு ஐந்தாண்டுகள் ஆகும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 9 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. உரிய தவணைக் காலத்தில் கடனை திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு 4 சதவீதம் மட்டுமே சலுகை வட்டித் தொகையாக வசூலிக்கப்படுகிறது. கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.1.60 இலட்சம் வரை கடன் பெறும் விவசாயிகளுக்கு வட்டியின்றியும், ரூ.3 இலட்சம் வரை கடன் பெறும் விவசாயிகளிடம் 7 சதவீதம் வட்டியும் வசூலிக்கப்படுகிறது.

பிரதம மந்திரியின் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் (PM-KMY) கீழ் 18 முதல் 40 வயதுள்ள விவசாயிகளுக்கு 60 வயது அடைந்தவுடன் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில், பொது சேவை மையத்தினருடன் இணைந்து கிராமம் வாரியாக விழிப்புணர்வு ஏற்படுத்தி இதுவரை 147 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் 14,707 ஏக்கரில் முதல்போக நெல் சாகுபடிக்காக 29.08.2019 (வியாழன்) அன்று முல்லை பெரியாறு அணையிலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களால் விவசாயத்திற்காக 200 கனஅடி நீர் மற்றும் தேனி மாவட்ட குடிநீர் தேவைக்காக 100 கனஅடி நீர் வீதம் மொத்தம் சேர்த்து 300 கனஅடி நீர் வீதம் 120 நாட்களுக்கு திறக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறையை கருத்தில்கொண்டு குறுகிய கால நெல் இரகமான கோ.51, என்.எல்.ஆர்.34449 ஆகிய இரகங்களை பயிரிட்டு தண்ணீர் சிக்கனத்தை கடைப்பிடித்து அதிக மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் நடவு செய்திட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் எஸ்.கௌதம், இ.வ.ப., மேகமலை வன உயிரினக் காப்பாளர் போஸ்லின் சச்சின் துக்காரம், இ.வ.ப., மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் ம.தீபாசங்கரி, வேளாண்மை இணை இயக்குநர் எஸ்.ஜவஹரிபாய், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கா.செந்தில்குமார், அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**